பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 04 புதன்கிழமை (16 - 02 - 2000) VALAMPURI ஒலி: 59

## நோர்வே வெளிநாட்டமைச்சர் இன்று கொழும்பு வருகின்றார்!

நீண்டகாலமாக தீர்த்துவைக்கப்படாமல் இருக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையே சமாதான பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற் கொள்ளும் நோக்குடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் 'கெனட் வொலி பேர்க்' இன்று காலை கொழும்பு வருகிறார்,

கொழும்பு வரும் வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலி பேர்க் முதலில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரைச் சந்தித்துப்பேசவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவை இன்று சந்திப்பார். ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு முடிவடைந்த பின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை வெளிவிவகார அமைச்சர் கெனட் வொலி பேர்க், சந்தித்து கலந்து உரையாட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இம்மாதம் 15 நாளில் பதினைந்து பேரைக் காணவில்லை

வவுனியாவில் இம்மாதம் முடிவுற்ற 15 நாட்களுள் 15 பேர் காணாமல் போயுள்ளதாக வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாட்டினைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா இணைப்பாளர்எஸ்.சிறிதரன் பாதுகாப்புப் படையினருடன் தொடர்பு கொண்ட போது 11 பேர் படையினர் வசம் பாதுகாப்பாக இருப்பதாக படையினர் அறிவித்துள்ளனர்.

ஏனைய நால்வர் பற்றிய தகவல் இராணுவத்தினரிடம் இல்லையென தெரிவிக்கப்படுகிறது.

காணாமல் போன நால்வரின் பெயர் விபரம் வருமாறு ரி. தர்மகுலநாதன் (18வயது) ரி. ஜெயசங்கர் (வயது 28) ஆர். துசிதரன் (வயது 16) ஆர். சந்திரகாந்தன் (வயது 15)

வ - 103)

## ★ பொலநறுவ - மட்டக்களப்பு வீதியில்

# புலிகளின் ஆர். பி. ஜி. தாக்குதலில் 13 பொலிஸார் பலி 15 பேர் காயம்!

## கொல்லப்பட்டவர் இருவர் பெண்கள்

— மட்டக்களப்பு விசேட செய்தியாளர் —

பொலநறுவவில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடர் அணி ஒன்றின் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆர்.பி.ஜி தாக்குதலில் 13 பொலிஸார் கொல்லப்பட்டனர். 15 பொலிஸார் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட 13 பொலிஸாரில் இருவர் பெண் பொலிஸார் ஆவர். காயப்பட்டவர்கள் வாழைச்சேனை, பொலநறுவ பொது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனத் தொடரணி மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை 4.30 மணியளவில் நடாத்திய ஆர்.பி.ஜி. தாக்குதலில் 13 பொலிஸார் கொல்லப்பட்டனர். 15 பொலிஸார் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு- வெலிகந்த பிரதான வீதியில் மியாங்குளம் என்னும் இடத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக 22 ஆம் திகதி ஐ. தே. கவுடன் பேச்சு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அரசிற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையேயான பேச்சுவார்த்தை எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

இப் பேச்சுவார்த்தையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணிப் புதைகுழிப்பகுதி தடையப் பொருட்கள் பார்வைக்கு

[கொழும்பு]

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் மற்றும் தடையப் பொருட்கள் எதிர் வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனை சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்

[புலோலி]

குடத்தனை, மணற்காட்டுப் பகுதி நேற்று அதிகாலை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு பலத்த தேடுதல். நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இத்தேடுதலின் போது செபஸ்ரியாம்பிள்ளை தேவசுதன் [வயது 23] சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வல்லிபுரம் இராணுவ முகாமிற்கும் பின்னர் பல்லப்பை இராணுவ முகாமிற்கும் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு வைத்து இவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி - தமிழ்க்கட்சிகள் சந்திப்பு

## இணக்கம் ஏதும் ஏற்படாது இடம் பெற்ற பேச்சு வார்த்தை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு புதிய அரசியலமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்கா தலைமையில் நேற்று மூன்றாவது நாளாக தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை 11.30 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ ஜனாதிபதி - ஈ. பி. டி. பி. எம். பிக்கள் சந்திப்பு:

## யாழ். கடல்நீரேரியில் கடற்றொழில் செய்ய அனுமதி!

யாழ்ப்பாணக் கடலேரியில் மீன்பிடிப்பதற்குக் கடந்த டிசம்பர் மாதம் முதல் பாதுகாப்புப் படையினால் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி மீன்பிடிப்பதற்கு மீண்டும் பாதுகாப்பு அமைச்சு அனுமதித்துள்ளது.

நேற்றையதினம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பை தொடர்ந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். தவராஜா, டாக்டர் விக்னேஸ்வரன் ஆகியோர் ஜனாதிபதியுடன் பிரத்தியேகமான சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பின் போது மீன்பிடித் தடையினால் யாழ்ப்பாண மீனவர்கள் எதிர்நோக்கியுள்ள கஸ்ரங்கள் பற்றியும் அவர்களின் பெறுமதி மிக்க வள்ளங்கள், வலைகள் கடலில் அழிவுற்றது பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா மீன்பிடித்தடையை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை

(6ஆம் பக்கம் பார்க்க)

## சின்னஞ்சிறு விளம்பரம்


### தேவை

யாழ். தனியார், மருத்துவமனைக்கும், சாவகச்சேரி மருத்துவமனைக்கும் தாதியர் தேவை. தொடர்பு:- யாழ். மெடிகல் சென்ரர் 166, 1ஆம் குறுக்குத் தெரு (வேம்படி பாடசாலை முன்) யாழ்ப்பாணம்.

(166)

### ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

சகல விதமான ஓவிய வேலைகள் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் பாடசாலைச் சின்னம், கீற்றேக் ஆகியவற்றை செய்திட S.S. யசோதரன் ஆ ஸ் 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-030)


## நிர்வாகிகள் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அண்மையில் தென்மராட்சி மக்கள் நலன் காப்பு அமைப்பிற்கான நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

இதன் தலைவராக ரி.சிதம்பரப்பிள்ளையும், உபதலைவராக டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், செயலாளர் கே. குகவீரசிங்கம், இணைச் செயலாளர் ரி. சண்முகநாதன், பொருளாளர் கே. மோகனராஜலிங்கம் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக இவ்வருடம் தெரிவுசெய்யப்பட்டனர்.

(க-21)

★ ★ ★

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் இ. சசிகுமார், செயலாளர் சி.சிவச்செல்வன் பொருளாளர் பொ. கிருபானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்துடன் 7பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(வ)

# செய்தித் துளிகள்

## 5 இலட்சம் நிதியுதவி

(அச்சுவேலி)

ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலய விளையாட்டு மைதான புனரமைப்புப் பணிக்கென வெளிநாடுகளில் வாழும் அப்பாடசாலை பழைய மாணவர் சங்கம் 5 இலட்சம் ரூபாய் பணம் அன்பளிப்புச் செய்துள்ளது.

இந்நிதியுதவி மூலம் விளையாட்டு மைதான புனரமைப்புப் பணியுடன் அயலில் உள்ள காணியை வாங்கி மைதானத்தை விஸ்தரிக்கும் பணியும் மேற் கொள்ளப்பட விருப்பதாக பாடசாலை அதிபர் எஸ். முத்துக்குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

(க-57)

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கூரைமீதுஏறி வேலையில் ஈடுபட்டிருந்த வேளைசறுக்கி விழுந்து முதுகுபாதிப்படைந்த நிலயில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்சப்பட்டுள்ளார்.

தும்பளையைச் சேர்ந்த சி.செல்லக்கண்டு (வயது51) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(க-7)

## குடிநீர் விநியோகம்

வலி. கிழக்கு பிரதேச சபையினால் இருபாலைப்பகுதி மக்களுக்கு பவுஸர் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதுவரை காலமும் குடிநீருக்காக மக்கள் நீண்ட தூரம் தண்ணீர் எடுக்க அலைய வேண்டியிருந்தது.

தற்போது இந்நிலைதவிர்க்கப்பட்டு அவர்கள் குடிநீர் பெறுகின்றனர். இருபாலை கிழக்குப்பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

## சுய தொழில் ஊக்குவிப்பு கடன்

(வடமராட்சிகிழக்கு)

குடும்பத்தலைவரை இழந்த பெண்களுக்கானசுயதொழில் ஊக்குவிப்புக்கடன் திட்டத்தின்கீழ் கற்கோவளம் தொண்டமனாறு உள்ளிட்ட 13சங்கங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு ரூபா40ஆயிரம் வீதம் சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் அண்மையில் வழங்கப்பட்டது.

வடமராட்சி வடக்குகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பணிமனையில் நடைபெற்ற நிகழ்வின்போது மேற்படி பயனாளிகளுக்கான கடன், கடற்றொழில்திணைக்கள அதிகாரிகளினால் வழங்கப்பட்டது.

(க-43)

## மாரீசன் கூடலில் 15 பேருக்கு உதவிப்பணம்

(இளவாலை)

இளவாலை தபாற்கந்தோரில் மாதாந்த பொதுசன உதவிப்பணம்பெற்றுவந்தவர்களில் பதின்நான்கு பேருக்கு தற்போது மாரீசன் கூடல்உபதபாலகத்தில் அவ் உதவிப் பணத்தை பெற்றுக் கொள்ள ஆவணசெய்யப்பட்டுள்ளதாக மாரீசன் கூடல்கிராமசேவகர் தெரிவித்துள்ளார்.

(க)

## வடமராட்சியில் கல்விப் பயிற்சி நெறி

(புலோலி)

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவு வடமராட்சியிலுள்ள எட்டுப் பாடசாலைகளில் முறைசாராக்கல்வி தொழிற்திறன் விருத்தி பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலய முறைசாராப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பீ. வேணுகோபால் மேற் கொண்டுள்ளார்.

(க-52)

## வங்கிக் கிளை மீண்டும் இயங்க முயற்சி

(ஊர்காவற்றுறை)

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையினை மீண்டும்ஊர்காவற்றுறையில் திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1991 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்த இக்கிளை, மீண்டும் அதே இடத்தில் இயங்குவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன எனத் தெரிய வருகின்றது.

(க-75)

## கலைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மக்களால் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திரு நாட் கொண்டாட்ட விழாவை ஒட்டிய கலைப் போட்டிகள் இவ் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இடம் பெற்று வருகிறது.

கோலம் போடுதல், வினா-விடைப் போட்டி, நாடகப் போட்டி, பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில-தமிழ் போட்டிகளும் இடம் பெற்று வருகின்றன.

இறுதி நாள் நிகழ்வில் பிரபல நடிகர் சந்திரகுமாரின் நகைச்சுவை நாடகம் இடம் பெற்றது.

(க)

## இன்று நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

நாதவாஹினி மலர் வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை காலை 10 மணியளவில் இராமநாதன் நுண்கலைக்கழக கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

செல்வி சியாமளா பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உட்பட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் அறிஞர்கள் பெருமளவில் இந் நிகழ்வில் கலந்து கொள்வர்.

(அ-9)

## தண்ணீர் தாங்கி அமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் மாணவர்களின் நன்மை கருதி பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு திட்டத்தின் கீழ் அரசினால் வழங்கப்பட்ட 98 ஆயிரம் ரூபாவில் தண்ணீர் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் ஆசிரியர்கள், மாணவர் பாவனைக்கென மலசல கூடங்கள் நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

(க-11)

## அதிபர் இடம் மாற்றம்

(மந்திகை)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் க. அம்பலவாணர் கரவெட்டி கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

(க-23)

## திருப்பலி ஒப்புக் கொடுப்பு

(இளவாலை)

புனித லூர்து அன்னையின் திருநாள் திருப்பலி கடந்த சனிக்கிழமை (2000.02.12) போயிட்டி லூர்துமாதா கோயிலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாதகல் கெபியிலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

ஞாயிறு திருநாள் திருப்பலியை யாழ் மறை மாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் அவர்கள் ஒப்புக் கொடுத்தார்

(க-12)

## இராசி பலன்

16.02.2000
புதன்கிழமை
(தமிழுக்கு மாசி 04)

ஏகாதசி உதயம் 7.15 வரை, திருவாதிரை மாலை 3.57 வரை, இராகுகாலம் பகல் 1.03 முதல் 3.31 வரை, சுபநேரம் மாலை 5.31 முதல் 7.01 வரை சித்தயோகம். சர்வ ஏகாதசி விரதம்.

**மேடம்:** நன்மதிப்பு, தொழில் லாபம், பொதுச் சேவை.

**இடபம்:** தர்மசங்கடம், கடின் படல், வைத்திய செலவு.

**மிதுனம்:** புதியவாய்ப்பு, திருமண யோகம், மனக்கசப்பு.

**கடகம்:** வீண்விவாதம், தொழில் பாதிப்பு, அலைச்சல்.

**சிங்கம்:** கல்விஞானம், விருந்தினர் கலகலப்பு, பயணம்.

**கன்னி:** பிறர் உதவி, காரிய சிறப்பு, தாயாருக்கு உபதேசம்

**துலாம்:** வாக்குப்பகை, சகோதரி சோகம், மறதி.

**விருச்சிகம்:** விரும்பாத இடமாற்றம், மனச்சுமை, தயக்கம்.

**தனுசு:** விவேகம், அதிகபிரசங்கம் தானதர்மம்.

**மகரம்:** புத்திரர் பெருமை, சுபச் செய்தி, பணவரவு

**கும்பம்:** வேலைப்பளு, உடல் உபாதை, கண்டிப்பு.

**மீனம்:** மனப்போராட்டம், எதிரி பயம், வயிற்றில்ரோகம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## இளைஞர் கைது!

குருநகர் தண்ணீர்த் தாங்கிப் பகுதியைச் சேர்ந்த கொன்ஸ்ஸரைன் றொசான் (வயது 25) என்பவர் அண்மையில் வேம்படிச் சந்தியில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

(ந)

## யாழ். கிரிக்கெட் அணியினர் பிரான்ஸ் அணியினரை தோற்கடிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். அணிக்கும் பிரான்ஸ் பல்கலைக்கழக அணிக்கும் இடையில் பிரான்சில் 50 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம் அண்மையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பிரான்ஸ் பல்கலைக்கழக அணி 40 பந்துப்பரிமாற்றத்திற்கு சகல விக்கட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். அணி 39. 1 பந்துப் பரிமாற்றத்தில் 9 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப்பெற்றுவெற்றியீட்டியது.

(க-57)

## யாழ். பிரதேச செயலக பிரிவின் உதைபந்தாட்ட முடிவுகள்

(ஈச்சமோட்டை).

யாழ், பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உதைபந்தாட்டப் போட்டித் தொடரில்

★குருநகர்பாடும்மீன்வி.க. அணியை எதிர்த்தாடிய நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை 4:2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

★ சுண்டுக்குளி கிறீன் பீல்ட் வி.க அணி அதனை எதிர்த்தாடிய கொய்யாத் தோட்ட வி.க அணியை 3:2 என்ற கோல்கணக்கில் வென்றது.

★ நாவாந்துறை சென் நீக்கிலஸ் அணி அதனை எதிர்த்தாடிய திருநகர் பாரதி விளையாட்டு கழக அணியை 4:0 என்ற கோல்க் கணக்கில் வென்றது.

★ பாடும்மீன் வி.கஅணியை எதிர்த்தாடிய கிறீன்பீல்ட் வி.க அணியை 4:0 என்ற கோல்க்கணக்கில் தோற்கடித்தது.

★ குருநகர் வி.க அணி எதிர்த்தாடிய கொழும்புத்துறை ஜெற்லைன் வி.க அணியை 3:0 என்ற கோல்க் கணக்கில் வென்றது.

★ குருநகர் வி.க அணி எதிர்த்தாடிய சென் நீக்கிலஸ் அணியை 'ரை பிரேக்கர்' பெனால்டி உதையின்போது கிடைத்த 1 கோலினால் வெற்றி பெற்றது.

(க-59)

## அம்பாறையில் மீண்டும் பலத்த மழை நெல் அறுவடை பாதிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் ஒரு வாரகால இடைவெளிக்குப் பின் மீண்டும் நேற்றுப் பலத்த மழை ஆரம்பமாகியுள்ளது.

இதனால் அறுவடையில் ஈடுபட்டுவந்த கரையோரப் பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் வெள்ளத்தில் மிதப்பதாகவும், வயல்வெளிகள் வெள்ளக்காடாய் காட்சியளிப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை —

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக இடம் பெயர்ந்திருந்த மக்கள் ஒரு சில தினங்கள் முன்பே தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வயல்வேலைகளை ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[க-9]

## வடமராட்சி வடக்கு பிர. செ. பிரிவில் 15இலட்சம் செலவில் காணிகொள்வனவு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத்திற்கான கட்டடம் அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபா செலவில் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் காணி பருத்தித்துறை வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு அண்மையில் அமைந்துள்ளது. இப் பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இப்பகுதிக் கிராம சேவகர்கள் நிதிசேகரிக்கும் நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர்.

அத்துடன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பொதுத்தாபனங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியை பிரதேச செயலர் நாடியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-43)

மாநகர ... மன்றம் யாழ்ப்பாணம்

### கசிப்பு வைத்திருந்தவர்கள் என்ற

# குற்றத்திற்காக 4 சந்தேக நபர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வைத்திருந்ததற்காக 4 நபர்கள் யாழ். மாவட்ட நீதி மன்றில் நீதவான் இ.த விக்னராஜா முன்நிலையில் நேற்று முன்தினம் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவர்களை விசாரித்த யாழ்.மாவட்ட நீதிபதி குற்றவாளிகளாகிய சின்னத்தம்பி பகவன் 750 லீற்றர் கசிப்பு வைத்திருந்ததால் 3000ரூபா தண்டப்பணமாகவும் 1000ரூபா தர்மப்பணமாக கட்டப்படல் வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

ரட்ணசிங்கம் புஸ்பராணி 375 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததால் 1000ரூபா தண்டப்பணமாகவும் 2000 ரூபா தர்மப்பணமாகவும் செலுத்த வேண்டுமென இராஜசிங்கம் சேகரன் 750 மில்லி லீற்றர் கசிப்பு வைத்திருந்ததால் 5000ரூபா தண்டப் பணமாகவும் 1000ரூபா தர்மப்பணமாகவும் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

பொன்னுத்துரை ராசம்மா 180 லீற்றர் கசிப்பு வைத்திருந்ததற்காக 2000 ரூபா தண்டப் பணமாகவும் 1000 ரூபா தர்மப் பணமாகவும் செலுத்தப்பட வேண்டுமென உத்தரவு இட்டுள்ளார்.

தர்மப் பணத்தை சைவ வித்தியாலய அபிவிருத்திச்சங்கத்துக்கும், யாழ். விழிப்புலன் அற்றோர் சங்கத்துக்கும், இருபாலை சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கும் நல்லை ஆதினத்திற்கும் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (க-2)

## நுவரெலியா பஸ்நிலைய பகுதியில் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்கப்பட்டது

நுவரெலியா பஸ்நிலைய கழிவறைக்கு அருகில் அண்மையில் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்படி குண்டு கண்டுபிடிக்கப்பட்டு நிபுணர்களை கொண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் பலத்த பதற்றம் நிலவிய போதிலும் அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை. (க)

## சைக்கிள் திருடன் உரிமையாளர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டான்

### அச்சுவேலியில் சம்பவம்

திருடிய சைக்கிளொன்றை விற்க முற்பட்ட திருடனை, சைக்கிள் உரிமையாளர்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; கடந்த 12 ஆம் திகதி கச்சேரி நல்லூர் வீதி பகுதியில் சைக்கிளைத் திருடிய திருடன், அச்சுவேலி பகுதியில் விற்பதற்காக சென்று கொண்டிருந்த வேளை, உரிமையாளர்கள் மோட்டார்சைக்கிளில் பின்தொடர்ந்து திருடனை மடக்கிப்பிடித்தனர்.

அச்சுவேலி பொலிஸ்நிலையத்தில் திருடனையும் சைக்கிளையும் ஒப்படைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-57)

## பன்னிரு திருமுறை பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் மாதாந்த பௌர்ணமி தினத்தில் நடாத்தப்படும் அகத்தியத் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் ஆகியன எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இளவாலை ஒல்லுடை அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற உள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஈழத்து தலைசிறந்த பல தேவார இசை விற்பன்னர்கள் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளனர். (க)

## முன்பள்ளி ஆசிரியைகள் 60 பேருக்கு சர்வோதய பணிமனையில் பயிற்சி

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்ட சர்வோதய இயக்கமும் வடபிராந்திய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதல்உதவிப் பிரிவும் இணைந்து 60 முன்பள்ளி ஆசிரியைகளுக்கு அடிப்படை முதல் உதவிப் பயிற்சியினை சர்வோதய பணிமனையில் அண்மையில் நடாத்தியுள்ளன.

இப்பயிற்சி நெறியில் பங்குகொண்ட முன்பள்ளி ஆசிரியைகளுக்கான சான்றிதழ்களை மாவட்ட ஆணையர் க. அருந்தவரசாவும் சர்வோதய இயக்கத்தின் வெளிக்கள உத்தியோகத்தரான திரு. ஏ. கே. சிவசுப்பிரமணியமும் வழங்கினர். (க-77)

## தம்பசிட்டியில் திருடர் தொல்லையால் விழிப்புக் குழுக்கள் அமைப்பு

(பருத்தித்துறை)

தம்பசிட்டிப் பகுதியில் திருடர்களின் தொல்லை மிகவும் அதிகரித்துள்ளதாக அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

தம்பசிட்டி வீதியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றினுள் புகுந்த திருடர்கள் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டு திருட முற்பட்ட சமயம் வீட்டினுள் இருந்தவர் சத்தமிட்டதுடன் திருடர்கள் ஓடித்தப்பிவிட்டனர்.

இப்பகுதியில் உள்ள கோயில்களில் திருட்டு சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதுடன் வீடுகளிலும் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-11)

## பங்குத்தந்தை நியமனம்

(புலோலி)

கிளிநொச்சி மறைகோட்ட முதல்வர் அருட்திரு ஏ. இருதயதாஸ் அடிகளார் பருத்தித்துறை பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பங்குத்தந்தை பேரருட் திரு.பீ.எம் இம்மானுவேல் அடிகளார் யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வு பிரிவுக்கான பங்குத்தந்தையாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க-25)

## தொலைத்தொடர்பு உரிமையாளர் மீது இனம் தெரியாத நபர் தாக்கு

(வவுனியா)

வவுனியாவில் தனியார் தொலைத்தொடர்பு நிலையம் நடாத்தி வரும் நடராஜா கருணாநிதி (31 வயது) இனம் தெரியாத நபரால் கடுமையாக தாக்கப்பட்டு வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரைத் தாக்கியவர் வவுனியாவில் இயங்கும் தமிழ் கட்சி ஒன்றின் ஆதரவாளர் என ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவித்துள்ளன, தற்சமயம் இந்த நபர் தலைமறைவாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஹாட்சியாவின் தென்மேற்கு பகுதியில் கடும் சூறாவளி, 11 பேர் பலி

### தேடுதல் பணி தீவிரம்

[இலண்டன்]

ஹாட்சியாவின் தென்மேற்குப் பகுதிகளில் நேற்று முன்தினம் சூறாவளிக் காற்று வீசியதில் 11பேர் இறந்துள்ளதாகவும் 100 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

கடும் வேகத்துடன் வீசிய காற்றினால் கட்டடங்கள் பல சேதமடைந்துள்ளதாகவும் மின்கம்பங்கள் பல சரிந்து வீழ்ந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன்.

பெருமளவு மக்கள் அகதி முகாம்களிலும், பாடசாலைகளிலும்தங்கி உள்ளதாகவும், இவர்களுக்கானநிவாரணவிநியோகம் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் தேடுதல் பணி முடுக்கிவிடப்பட்டதாகவும், கட்டட இடிபாடுகளுக்கிடையில் மேலும்பல சடலங்கள் அகப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [க-5]

### இந்திய - பங்களாதேஷ்எல்லைப்பரப்பில்

## ஏற்படவிருந்த விமான விபத்து தவிர்ப்பு அறிக்கை சமர்ப்பிக்க இந்தியா பணிப்பு

(புதுடில்லி)

இந்திய - பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் ஏற்படவிருந்த பாரிய விபத்து விமானிகளின் புத்திசாதுரியத்தினால் தவிர்க்கப்பட்டது.

600 க்கும் மேற்பட்ட மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது; டெல்லியில் இருந்து டாக்கா சென்ற விமானமும், துபாயில் இருந்து டாக்கா சென்று கொண்டிருந்த அரபு நாட்டு விமானமுமே எதிர்பாராமல் மோத இருந்தன.

இவ் இரு விமானங்களும் நேர் கோட்டில் சென்று, ஒன்றை, ஒன்று எதிர்கொள்ளத் தயாரான வேளையில், இதனை உணர்ந்து கொண்ட இரு விமானங்களின் விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் நிலமையை சீர்ப்படுத்தும் நோக்கில் கட்டளைகளைப் பிறப்பித்ததாகவும் அதனைத் தொடர்ந்து, விமானங்கள் மேலும் கீழுமாகப் பறந்து வரவிருந்த பேராபத்தை தடுத்து அதில் இருந்த 600 இற்கும் மேற்பட்ட பயணிகள் உயிரைப்பாதுகாத்ததாகவும் தெரியவருகிறது.

இவ்விபத்து நடந்ததற்கான காரணம் பற்றிய விசாரணைகளை உடன் நடாத்தி, அறிக்கை சமர்ப்பிக்குமாறு, இந்திய அரசு விமானப் போக்குவரத்துப் பிரிவின் அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்திருப்பதாக அறிய முடிகிறது. (க-9)

## நேபாளத்தில் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் இயக்கத்தினர்

(காட்மண்டு)

நேபாளத்தில் அதிதீவிர இடதுசாரி மாவோ வாதிகளும், அதிதீவிர முடியாட்சியை ஆதரிப்போரும் அந்நாட்டு ஜனநாயகத்திற்கு மிகப் மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள் என பிரதமர் கே·சி·பட்டாராய் கவலை தெரிவித்துள்ளார்·

அதிதீவிர இடதுசாரிகள் மாவோவாதிகள் என்ற போர்வையிலும், அதிதீவிர வலதுசாரிகள் மன்னரின் மாளிகையின் பெயராலும் இயங்குகிறார்கள்· இந்த இரு பகுதியினரையும் நசுக்கி ஒடுக்கினாலே நாட்டில் நிம்மதி பிறக்கும்.

நேபாளத்தின் ஜனநாயக முன்னேற்றத்துக்கு மிகப் பெரும் தடையாக இருப்பவர்களும் இவர்களே எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை—

நேபாளத்தின் குடியரசுக்கும், அந்நாட்டு பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் எதிராக மாவோ வாதிகள் மக்கள் யுத்தத்தை ஆரம்பித்து, 5 ஆண்டுகள் நிறைவாகும் தருணத்தில் பிரதமர் இவ்வாறு கூறி இருப்பது தொடர்பாக பலவித அபிப்பிராய பேதங்கள் சர்வதேச அரசியல் நோக்குநர் மத்தியில் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## இந்திய அணி தோல்வி

(ஹெய்ரோ)

எகிப்தின் தலைநகர் ஹெய்ரோவில் நடைபெறும் 2 வது அக்பர் அல்யூட் சர்வதேச ஹொக்கிப் போட்டியின் ஆரம்பப் போட்டியில் இந்திய அணி தென் ஆபிருக்க அணியிடம் 1:2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. (க-5)

### மத்தியபீஹார், தென்பீஹார்

## சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு மீண்டும் ஆரம்பம்

(புதுடில்லி)

மத்திய பீஹாரிலும், தென் பீஹாரிலும் 44 சட்டப் பேரவைத் தொகுதிகளில் 188 வாக்குச் சாவடிகளில் நேற்று மீண்டும் வாக்குப் பதிவு நடை பெற்றது.

மேற்படி சட்டமன்றத் தேர்தலின் போது ஏற்பட்ட நிலக்கண்ணி வெடிப்புக்கள் வன்முறைகளைப்படுத்தும் தேர்தலில் வாக்குப் பதிவின் போது ஏற்பட்ட மோசடியினாலும் மீண்டும் வாக்குப் பதிவு நடை பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ராஜஸ்தான் மத்திய பிரதேசம் மேற்கு வங்காளம், பஞ்சாப் போன்ற பல்வேறு இடங்களிலும் சட்டமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (க-5)

## உலக வலம்

## மோதலின் போது பத்துப் பேர் பலி!

(அங்கரா)

துருக்கியின் தென் கிழக்கு நகரான பான்லெட்டில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் ஒன்றின் போது 10 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பலர் காயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லப்பட்ட இப் 10 பேரில் 5பேர் பொலிஸார் என்றும் மிகுதி 5பேர் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [க-5]

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல - 5

★ இலக்கம் 1 - 5 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(1) பிரசாத் யாரையும் கண்டால் அஞ்சிப் பின் வாங்குகின்றான், முகத்தை மறைத்துக் கொள்வான், இரவில் பயங்கரக் கனவுகள் கண்டு திடுக்கிட்டு விழிப்பான். எனவே

(1) பிரசாத் ஒரு பைத்தியக்காரன்.
(2) பிரசாத் ஒரு பயங்கர அனுபவத்தைப் பெற்றிருக்கின்றான்.
(3) பிரசாத் ஒரு நடிகன்.

(2) வர்த்தக நிலையங்களில் விற்கப்படும் பால்மா தொடர்பாகத் தரப்பட்ட கூற்றுக்களுள் **தவறானது.**

(1) அவை எல்லாம் பசுக்களில் இருந்தே பெறப்படுகின்றது.
(2) அவை பயன்படுத்தப்படவேண்டியகாலப்பகுதி வரையறுக்கப்பட்டுள்ளது.
(3) தாய்ப்பாலுக்குப் பதிலாக இப்பால்மாவை கொடுப்பதால் பிள்ளைகளின் ஆரோக்கியம் பாதிப்படையும்.

(3) வானம் தொடர்பாகத் தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் **தவறானது.**

(1) உடுக்கள் மின்னும் இரவு வானம் மிக அழகானது.
(2) சூரியனைப் போலவே சந்திரனும் கிழக்கில் உதித்து மேற்கில் மன்றவது போல் தோன்றும்.
(3) மழைகாலங்களில்வானம் தெளிவாகக் காணப்படும்.

(4) விளம்பர நிகழ்ச்சியொன்றின் போது பொதுசனத் தொடர்பாளர் ஒருவர் வினவிய வினாவிற்கு நிகழ்ச்சியில் பங்குபற்றிய 50 பெண்களில் 48 பேர் பவர் சோப் பயன்படுத்துவதாகத் தெரிவித்தனர். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது

(1) பவர்சோப் ஏனையசோப் வகைகளைவிட சிறந்தது.
(2) இலங்கையில் வாழும் பெண்களில் அதிகமானோர் பவர்சோப்பை பயபடுத்துகின்றனர்.
(3) 50 பெண்களில் 48 பேர் பவர்சோப்பை விரும்பி பயன்படுத்துகின்றனர்.

(5) கடற்கரைப் பகுதியின் இயற்கைத் தன்மையை மாற்றுவதற்கு காரணமாக **அமையாதது.**

(1) கடற்கரைப் பகுதியில் முருகைக் கற்பாறைகளை அகழ்ந்தெடுத்தல்.
(2) கடற்கரைப் பகுதியில் தொழிற்சாலைகள், குடியிருப்புக்களை அமைத்தல்.
(3) கடற்கரைப் பாதுகாப்புத் தொடர்பான செயற்பாடுகளுக்கு தனிநபர் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்குதல்.

★ **அரசினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச சீருடைப் பொதியில் காணப்பட்ட துண்டுப்பிரசுரம் கீழே தரப்பட்டுள்ளது.**

**இப்பிரசுரத்தில் காணப்படும்வெற்றிடங்களை அடைப்புக்குள் தரப்பட்டிருக்கும் சொற்களுள் பொருத்தமானவற்றை வைத்து நிரப்புக.**

(சின்னமாக, அர்ப்பணித்துள்ளோம், எழில்மிகு, மனவுறுதியுடன், நீங்கள்)

**அன்புச் சிறார்களே!**

எமது (6) .................. தாய்நாட்டின் உண்மையான வாரிசுகளாக நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். சவால்களை (7) ................ சமாளிக்கக் கூடிய அறிவினையும் பண்பினையும் தன்மானத்தையும் தன்நம்பிக்கையினையும் கொண்ட பிரஜைகளாக (8) ................ வளரவேண்டும் என்பதே எமது போவாவாகும். அதற்கு எம்மால் இயன்ற அனைத்தையும் செய்வதற்கு எம்மை (9) .................

'நாங்கள் இலங்கையர்கள்'' என அகிலத்தை விழித்து அச்சமின்றிக் குரலெழுப்பக் கூடியவாறு இருபத்தோராம் நூற்றாண்டில் உலகில் எந்தத் தேசிய இனத்துக்கும் எதிலும் குறைந்தவர்கள் அல்லர் என நீங்கள் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். அந்த நிலையை அடைவதற்கு உங்களுக்கு ஆதரவு அளிப்பது தலையாய கடமையாகும் என்பதை நாங்கள் சரிவரப் புரிந்து கொண்டுள்ளோம்.

அந்த உயர்ந்த நோக்கத்தின் (10) ........... இந்தச் சீருடை உங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்படுகின்றது.

★ உணவுச்சாலை ஒன்றினுள் மதிய உணவை உண்பதற்காக டென்சி, யூலி, ஜெனோசியா, பெனடிற்றா, தபீத்தா, நிவேதிகா ஆகிய நண்பர்கள் அறுவர் வட்டமேசை ஒன்றைச் சுற்றி அமர்ந்துள்ள விதம் கீழே தரப்பட்டுள்ளது.

★ டென்சிக்கு இடதுகைப்பக்கத்தில் பெனடிற்றா அமர்ந்துள்ளார்.

★ பெனடிற்றாவுக்கு வலதுகைப்பக்கத்தில் இரண்டாவதாக அமர்ந்துள்ள ஜெனோசியா நிவேதிகாவுக்கு இடதுகைப்பக்கத்தில் உள்ளார்.

★ தபீத்தா பெனடிற்றாவுக்கும் யூலிக்கும் இடையே அமர்ந்துள்ளார்.

(11) டென்சிக்கு வலதுகைப்பக்கத்தில் இருப்பவர் யார்?
(12) தபீத்தாவுக்கு வலதுகைப்பக்கத்தில் இருப்பவர் யார்?
(13) டென்சிக்கும் தபீத்தாவுக்கும் இடையே அமர்ந்திருப்பவர் யார்?
(14) ஜெனோசியாவும் யூலியும் ஒருவரது இடத்தில் மற்றவராக அமர்ந்திருந்தால் நிவேதிகாவுக்கு வலதுகைப் பக்கத்தில் இருப்பவர் யார்?

★ **பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

வயல் உழுது வரம்புகட்டி
வரும் மழைக்கு காத்திருப்போம்
வந்ததே தங்க மழை
வருவீர்களே தோழர்களே
பெட்டியில் நெல்லெடுத்து
எட்டி எட்டி வீசிடுவோம்
வரிசை தவறாமலே
வயல் முழுதும் வீசிடுவோம்.

(15) வரும் மழைக்கு காத்திருப்பது எதற்காக?
(16) இப் பாடலில் வரும் அடுக்குத்தொடரினை எழுதுக?
(17) ''வந்ததே தங்க மழை'' என்பதில் அடைமொழிச் சொல் எது?
(18) பாடலில் காணப்படும் இரண்டு வினைச் சொற்களை எழுதுக?
(19) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஒத்தகருத்துள்ள சொல்லை எழுதுக?

(1)வயல்:-........ (2)தோழர்கள்:-.........(3)வரிசை:-.........

(20) பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக?

(1)தோழர்கள்:-......(2) பெட்டி:-.........(3) மழை:-.........

ஆக்கம் - வை. சசிகுமார்

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 04

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(01) த. கஸ்தூரி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(02) மோ. மொறின், யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(03) தெ. துவாரகன், யா/ எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்.
(04) சு. கௌசியா, பளை மத்திய கல்லூரி.
(05) த. தக்சனா, யா/ கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை.
(06) கோ. அர்ச்சுனன், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
(07) மு. கஜனி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(08) பா. மயூரிகா, யா - கோ/ தெ.றோ க. பாடசாலை.
(09) ச. சிந்துஜா, யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
(10) ச. யாழினி, யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(11) ச. நிமலன், கிளி/ மாசார் அ.த.க. பாடசாலை.
(12) தே. கஜேந்தினி, கிளி/ சேரறன்பற்று கணேசா வித்தியாலயம்.
(13) சி. கோபிநாத், யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.
(14) நி. குயிந்தன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
(15) ந. பத்மறாயினி, பளை மத்திய கல்லூரி.
(16) ப. செந்துளா, யா/ கணேச வித்தியாலயம்.
(17) ச. வாகுலன் யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.
(18) ம. சௌதினி ஜோய், யா/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்.
(19) ஆ. சஞ்ஜியா, யா/ நாகர் கோவில் மகா வித்தியாலயம்.
(20) தெ. பவனுஜா யா/சோதிவேம்படி வித்தியாசாலை மானிப்பாய்.
(21) சி. சிவறஞ்சினி யாழ். தா. இ. த. க. பாடசாலை.
(22) ந. டயதுனா யா/எழுதுமட்டுவாள் கணேச வித்தியாலயம்.
(23) செ. பார்கவி சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
(24) சி. சிவகணேசன் யா/பரியோவான் கல்லூரி.
(25) ச. கிரிசாளினி யாழ். சென்யோன் பொஸ்கோ.
(26) க. சசிதாஸ் பளை மத்திய கல்லூரி.
(27) த. துளசிகா யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
(28) சி. கஸ்தூரி அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
(29) தெ. தெய்வீகா யா/புற்றளை மகாவித்தியாலயம்.
(30) சு. செந்தூரன் யா/மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.
(31) பா. நிருஜா யா/டிறிபேக் கல்லூரி.
(32) இ. கஜீபன் யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்.
(33) க. கல்சியா யா/கைதடி கலைவாணி வித்தியாலயம்.
(34) இ. சுஜிதா யா/ஏழாலை புனித இசிதோர்.
(35) சு. அபிராமி பளை மத்திய கல்லூரி.

### கல்விப்பகுதி வினா இல. 05
"வலம்புரி"
இல, 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ...............................................

சொந்த முகவரி: ...............................................

கற்கும் பாடசாலை: ...............................................

மாணவர் கையொப்பம்: ...............................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

## நினைந்துருகல் நிகழ்வு

(அச்சுவேலி)

தனியார் கல்வி நிறுவன பிரபல இயக்குநரும், இரசாயன ஆசிரியருமான கனகசபை ஆனந்தக்குமார் கொழும்பில் இறைபதம் அடைந்தமையை நினைத்து 'நினைந்துருகல்' கூட்டம் ஒன்று அண்மையில் இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரியூட் நிறுவனத்தில் இடம் பெற்றது.

நிறுவன இயக்குநர் த. வரதராஜா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்பு கலை பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர். க. தேவராஜா முன்னாள் கல்விப் பணிப்பாளரும் வலம்புரி பிரதம ஆசிரியர் கோ. சி. வேலாயுதம் உட்பட பலர் இரங்கலுரைகள் நிகழ்த்தினர். (க-57)

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு நடாத்தும் பண்ணிசைப் போட்டி சித்திரை மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம் பெற உள்ளது.

மேற்படி பண்ணிசைப் போட்டியில் பங்கு பற்ற ஆர்வம் உடையோர் சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி சித்திரை மாதம் 14ஆம் திகதி ஆகும். (க)

## இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி இந்து மாமன்றம் நடாத்தும் இராமகிருஷ்ண ஜெயந்தி விழா நாளை 17ஆம் திகதி முற்பகல் 9.30 மணியளவில் விவேகானந்தர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜகோபால் (செம்பியன் செல்வன்) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (க)

## இலங்கைக்கான புதிய தூதுவர்

(கொழும்பு)

அமெரிக்காவின் புதுடில்லி தூதுவராலயத்தில் பிரதித் தூதுவராக இருந்த ஈ. எஸ்லே அமெரிக்காவின் இலங்கைக்கும் மாலைதீவுக்குமான தூதுவராக ஜனாதிபதி பில் கிளிங்டனால் நியமிக்கப்பட்டுள்ளார். (க-4)

## புலமைப் பரீட்சை வினா இல 4 விடைகள்

(01) — (2) (02) — (2)
(03) — (3) (04) — (1)
(05) — (2) (06) — (3)
(07) — (2) (08) — (3)
(09) — (01) (10) — (1)
(11) — ல் (12) — பூவிதழ்
(13) — கருமை -|- பலகை
(14) — (63)(15) — (765)
(16) — வைத்தியர்
(17) — 5kg 250g
(18) — 4,6,10(19) — (4)
(20) — (15) (21) — (25)
(22) — (18) (23) — (9)
(24) — (10) (25 — (50)
(26) — ச (27) — த
(28) — ச (29) — ச
(30) — ச

யாழ்ப்பாணம்

உஞற்றுபவர்க்கும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி
தாழாது உஞற்றுபவர்—
- குறள்

# வலம்புரி

## பேராசிரியரின் குரல்

யுத்தத்தின் கோரப் பிடியில் சிக்குண்டுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்தினை புதிய நூற்றாண்டில் திட்டமிட்ட முறையில் புனரமைப்பு மீள் அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படைத்திட்டமிடல் நடவடிக்கைகள் இப்போதேசெய்யப்படல் வேண்டும்.

சமாதானம் ஏற்பட்ட பின்னர் தான் புனரமைப்பு, மீள் அபிவிருத்தி பற்றி நாம்சிந்திக்க வேண்டும் என்ற நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்து மக்களை நிம்மதியாக வாழச் செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் இங்குள்ள யாவருக்கும் உண்டு.

சர்வதேச ரீதியில் யுத்தத்தின் கெடுபிடிகளில் மூழ்கியிருந்த யப்பான், இத்தாலி,ஜேர்மனி, வியட்நாம் போன்ற மீள்நாடுகளிலும் புனரமைப்பு அபிவிருத்திக்கான திட்டமிடல் பணிகள் இவ்வாறே இடம் பெற்றன. அவற்றின் அடிப்படையிலேயே வட இலங்கைக்கான புனரமைப்பு மீள அபிவிருத்தி பற்றியதிட்டமிடல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. இவை பேராசிரியர் கலாநிதி மைக்கல் லியோன் லீல் அவர்களின் ஆத்மார்த்த அறிவின் அழைப்பு.

யாழ். நகரின் நீண்டகால புனரமைப்பு மீள் அபிவிருத்தியைக் கருத்தில்கொண்டுபுனரமைப்பு மீள் அபிவிருத்திச் செயற்பாடும், நல்ல திட்டமிடலும் தயாரிக்கப்படல் வேண்டும். இத்தகைய பணிகளில் யாழ்ப்பாணப் பிரதேச மக்கள் உண்மையாகப் பங்கேற்கக் கூடிய வழி வகைகளும் செய்யப்படல் வேண்டும்.

நாம், நமது என்ற உரிமை உணர்வுதுளிர் விட்ட நாடுகளே விடுதலைபெற்றிருக்கின்றன. விடுதலை என்கின்ற போது பொருளாதாரமின்மை, தொழில் வளமின்மை, உழைக்கும் கரங்களின் வெறுமை, சுயமைத்தன்மை, சுயநலம் என்கின்ற பல்வேறு துறைகளிலிருந்தும் விடுதலை பெறுதலேஉண்மை விடுதலையாகும்- அது போதுதான் சுதந்திரத்தின் பேற்றினை உணரலாம்.

- அன்புடன் ஆசிரியர்

# சைவ, வைஷ்ணவர்கள் அனைவருக்கும்

# பொதுவானது 'ஏகாதசி' விரதமே

காயத்திரிக்கு மேலே மந்திரமில்லை: தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை: காசிக்கு மேலே தீர்த்தமில்லை. ஏகாதசிக்கு சமமான விரதம் எதுவும் இல்லை. என்று தர்ம சாஸ்திரம் கூறுகின்றது.

மனிதர் எல்லோரும் அதாவது எட்டு வயது முதல் எண்பது வயது வரை உள்ளவர்கள் யாவரும் சுக்கில பக்ஷ, அமர பக்ஷங்களில் வரும் இரு ஏகாதசிகளில் உபவாசம் இருக்க வேண்டும் என்று தர்ம சாஸ்திரம் கூறுகின்றது.

ஏகாதசியில் அன்னத்தைச் சாப்பிட்டால் பிராயச்சித்தமே கிடையாது என்று இருக்கின்றது. சிலவிதமான நோயாளிகள். பலஹீனர்கள், அன்னம் தவிர எதுவும் சமிபாடு அடையாது என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டால், சாதத்தைக் கஞ்சி வடிக்காகாமல் பாகம் செய்து அதில் உப்பு, புளி, காரம் எதுவும் சேர்க்காமல் ஒரு வேளை மட்டும் சிறிதளவு ஏகாதசியன்று சாப்பிடலாம்.

ஏகாதசியில் நீர் கூட அருந்தாமல் இருப்பது உச்சமானது. அது ரொம்பவும் கஸ்டம். சாத்வீகமான பானங்கள் மட்டும் அருந்துவது அடுத்தபடி, பழத்தோடு பால் சாப்பிடுவது: அடுத்த படியாக அரிசி சேர்க்காத பூரி மாதிரியானவற்றைச் சாப்பிட்டு இன்னோர் வேளை பழம், பால், ஆகாரம் செய்வது இன்னும் ஓர் படிகீழே. ஒருவேளை இட்லி, தோசை,பொங்கல். உப்புமா இன்னோர்வேளை பால், பழமும் சாப்பிடுவது இதற்குக் கீழே போகக் கூடாது.

வருஷத்தில் எல்லா ஏகாதசியிலும் பூர்ண உபவாதமிருக்க முடியாமல் ஒரு வேளைபலகாரம் அருந்தினாலும் ஒரே ஒரு ஏகாதசியாவது பூர்ண உபவாஸமாக முழுப்பட்டினி இருக்க வேண்டும்.

### பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா

பாண்டவர்களில் ஒருவர் வீமன். இவ் விரதத்தின் மகிமையை அறிந்து இருந்தான். ஆயினும் உபவாசமிருக்க முடியாமையினால் அநுட்டியாதிருந்தான். துரியோதனன், கண்ணன், சகுனி முதலானோர் இதனைக்கண்டு வீமனை இகழ்ந்தனர். அதனால் நாண மடைந்த வீமன் வியாசமுனிவரிடம் சென்று ''சுவாமி ஏகாதசி மாதம் இருமுறை வருகின்றது. வருடத்தில்24முறைவருகின்றது. இதனை என்னால் அனுட்டிக்க முடியாது; ஒருமுறை அனுட்டிப்பதால் முழு வருடப்பலனும் கிடைக்கும் பொருட்டு ஓர் உபாயம் சொல்லி அருள வேண்டும்'' என பிரார்த்தித்தான். அதனைக் கேட்ட வியாசர் ''மாசி மாதத்து வளர் பிறையில் வரும் ஏகாதசியை முறைப்படி அனுட்டிப்பாயாயின் 24 ஏகாதசிகளையும் அனுட்டிக்கும்பலன் கிடைக்கும்'' என்று கூறினார். வீமன் அனுட்டித்தமையினால் மாசி மாத ஏகாதசிக்கு வீம ஏகாதசி எனவும் ஒரு பெயர் வழங்கப்படுகின்றது. அத்தினமே இன்று ஆகும்.

ஏகாதசி என்பது வளர் பிறை தேய்பிறைகளின் பதினோராம் நாள். இவ்விர்தம் காத்தற்கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியைக் குறித்து அனுட்டிக்கப் படுவது ஏகாதசி சிவபெருமானுக்குரிய திதியாகும் இவ்விரண்டு திதிகளும் பொருந்திவரும் விரதமாதலின் சைவர்கள் வைஷ்ணவர்கள் யாவரும் இதனை அனுட்டிப்பர். விஷ்ணுவானவர் அமிர்தம் கடையப்பண்ணி அதை எடுத்த நாளே ஏகாதசி என்பதாலும் அதைப் பொதுவில் விஷ்ணு ஸம்பந்தம் உள்ளதாக நினைக்கின்றோம். ஆனால் இந்த அமிர்தம் வரும் சமயத்தில் முதலில் உண்டான ஆவகால விஷத்தைப் பரமேஸ்வரன் பூஜித்ததை முன்னிட்டுத்தான் அன்று எவரும் சாப்பிடக் கூடாது என்று ஏற்பட்டுள்ளதாக சைவர்கள் கூறுவார்கள். இப்படி சைவம் வைஷ்ணவப் இரண்டிற்கும் ஏற்கத் தக்கதாயிருப்பதோடு,ஹிந்துவாகம் பிறந்தவனில் எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டவனாயிலும் அவருக்கு ஏகாதசி உபவாஸத்தை விதித்திருப்பது அதற்கு விசேஷமாகிறது.

ஏகாதசிக்கு முதல் நாள் ஒருபொழுதுண்டு ஒருமனத்தோடும் இறைதியானத்தோடும் பக்தி சிரத்தையோடும் துயிலல் வேண்டும். மறுநாள் சூரியன் உதிக்க 5 நாளிகைக்கு முன் எழுந்து நித்திய கருமங்களை முடித்துச் சங்கற்பஞ் செய்து பகல் உபவாசம் இருந்து இரவு நான்கு ஜாமத்திலும் விஷ்ணு மூர்த்தியைப் பூசித்தல் வேண்டும். மறுநாட்காலை உறவினர்கள் அடியார்களுடன் பாராயணம் செய்தல் வேண்டும். இபன்றவரை அன்ன தானங்களும் புரிதல் நன்று.

(தொடரும்)

வட- இலங்கையில்

# 1981ஆம்ஆண்டுடன்ஒப்பிடும்போது

# சனத்தொகை வெகுவாக குறைவு

### யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

வட இலங்கையில் சனத்தொகையின் அளவு 1981ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அரைவாசியாகக் குறைந்து விட்டது.மக்கள் குடியமர்வு இல்லாதநிலையில் பெரும் தொகையான இடங்கள்வட இலங்கையில் காணப்படுகின்றன. எனவே மக்களை வெற்றிடமாகவுள்ள இடங்களில் குடியமர்த்த நாம் திட்டமிடவேண்டும். குடியேற்றத்திட்டங்களில் வறிய குடும்பங்களைக் குடியமர்த்துவதால் அவை முன்னேற்றமோ அபிவிருத்தியோ அடைவதில்லை. அதற்குரிய மாற்று வழிகளை நாம்இனம் கண்டு செயல்படுத்த வேண்டும். அத்துடன் எமது பிரதேசத்திலுள்ள வரணி,காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களை நகரங்களாக்குவதன் மூலம் அப்பகுதிகளில் மக்கள் கூடுதலாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தலாம்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்ற வட இலங்கைக்கான புனரமைப்பு மீள் அபிவிருத்திக்கான திட்டமிடல் ஆய்வரங்கில்துணைவேந்தர் பேராசிரியர்.பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றும் போது குறிப்பிட்டார் பேராசிரியர்.வி.தர்மரத்தினம் தலைமையில்நடைபெற்ற ஐந்தாவது செயலமர்வில் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடர்ந்து உரையாற்றும்போது—

குடாநாட்டில் பல இடங்களில் வாழ்ந்த குடும்பங்கள் பல்வேறு காரணங்களுக்காக யாழ்ப்பாணம் நகரில் தற்போது குடியேறியுள்ளனர். இதனால் அவர்கள் முன்பு வாழ்ந்த இடங்கள் வெறுமையாகவே இருக்கின்றன. அத்துடன் வடக்கு —கிழக்கு மாகாணத்துக்கு மத்திய இடமாக மாங்குளத்தை நாம் மாற்றவேண்டும். அந்தவகையில் எமது பிரதேசத்தின் குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்படுதல் வேண்டும்.நல்ல தண்ணீரை நோக்கியே மக்கள் தமது குடிநகர்வுகளை மேற்கொள்கின்றனர்.இதற்கு மாற்று வழியாக குடும்பங்கள் இருக்கும் இடங்களுக்கு நல்ல தண்ணீரைக் கிடைக்கச் செய்தல் வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

கலாச்சாரப் புனரமைப்பும் மீள் அபிவிருத்திபற்றி பட்டப்பின்படிப்பின் பீடாதிபதி பேராசிரியர். அ. சண்முகதாஸ். இச் செயலமர்வில் பேசும் போது—

வடஇலங்கைக்கான பாரம்பரிய கலாச்சாரத்தைச் மீண்டும் எமது பழைய நிலையில் கட்டியெழுப்ப வேண்டும். கலாச்சார விழுமியங்களைப் பேணிக் காப்பதற்குப் பல்வேறுவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைள் எடுக்கப்படல் வேண்டியது மிக அவசியமானதாகும். எம்பிரதேசத்தில் இருந்த தொல்பொருட்கள் காட்சியகத்தை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மனிதகுலத்துக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாக புதுமைகள் பல புகுத்தப்பட்டு கலை நிகழ்ச்சிகள் உருவாக்கப்படல் வேண்டும்.

எமது பிராந்தியத்தில் யுத்தத்தின் காரணமாக அழிக்கப்பட்ட வணக்கத்தலங்களைப்புனரமைப்புச் செய்து பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். எமது பாரம்பரிய மரபுகளை நாம் மதிக்கவேண்டும். ஒரு இனத்தின் சிறப்புக்களை நன்கு எடுத்துக்காட்டுவது அதன் கலை கலாச்சார விழுமியங்கள் ஆகும் எனக்குறிப்பிட்டார்.

முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலை அபிவிருத்திபற்றி நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி . சபா. ஜெயராசா உரையாற்றும்போது.

நமது நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற முன்பள்ளிக் கல்வி நூல்களில் இலக்கணப்பிழைகள் காணப்படுகின்றன, இந்த நிலைவருந்தத்திற்குரியதாகும். யாழ்ப்பாணத்தில் 70 சதவீதமான பாலர்கள் பாலர் கல்விவசதி இன்றி இருந்து வருகின்றனர்.அத்துடன் எமது பிரதேசத்தில் மொத்தமாக13 நிறுவனங்கள்முன்பள்ளிகளை நடாத்தி வருகின்றன. ஆயினும் கூட இந்த நிறுவனங்கள் மத்தியில் முன்பள்ளித் திட்டம்பற்றிய சிந்தனையில் செயல்பாட்டில் இணைப்போ அல்லதுபொதுவானசெயலாக்கமோ இல்லாமை கவலை தருவதாகவுள்ளது.

அத்துடன் கடந்தகாலங்களை விட இன்றைய சூழ் நிலையில் முன்பள்ளிக் கல்வியானதுமுக்கியத்துவம்பெற்று விளங்குகின்றது. இத்துறைமென்மேலும் அபிவிருத்தி செய்ய நாம் எல்லோரும் முயலவேண்டும் எனகூறினார்.

மேலும் இறுதிநாள் ஆய்வரங்கில் இரண்டாம் தரப் பாடசாலைகளின் அபிவிருத்தி பற்றி பேராசிரியர். கே.சின்னத்தம்பியும், சுகாதாரத்துறையின் புனரமைப்பு பற்றி வைத்திய கலாநிதி.என். சிவராஜாவும் புனரமைப்பு மீள் அபிவிருத்தித்துறையில் பெண்கள் பங்குபற்றி திருமதி. எஸ். கிருஷ்ணகுமாரும் நன்னீர் மீன் வளர்ப்புத்திட்டம் .பற்றி பேராசிரியர். கே. சித்திரவடிவேலுவும். ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். (க-77)

# தனியார் பஸ் கட்டணம் அதிகரிப்பு பயணிகள் மத்தியில் அதிருப்தி

(அச்சுவேலி)

பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து சில தனியார் போக்குவரத்து சிற்றூர்தியாளர்களும் பிரயாணக் கட்டணத்தை தன்னிச்சையாக அதிகரித்திருப்பதனையடுத்த பொதுமக்கள் பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தனியார் போக்குவரத்துச் சிற்றூர்திகளுக்கான பிரயாணக் கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக தனியார் சிற்றூர்த்தி சங்கம் இதுவரை எந்தவொரு தீர்க்கமான முடிவையும் எடுத்திராத போதிலும் சில தனியார் சிற்றூர்த்தியாளர்கள் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு வருவதால் பிரயாணிகள் தமது பிரயாணத்திற்காக அதிக பணத்தை செலவிட வேண்டிய நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

[க-14]

## இன்றைய சிந்தனை

அன்றாடம் அரைமணி நேரம்ஆழமானசோகத்தை அமைதியான இடத்தில் உருவாக்கு- ஏனெனில் அதுவே உனது ஆழமான வாழ்க்கையின் அத்திவாரங்கள்.

உயர்தர மாணவர்களுக்கான

# மதிப்பீட்டுப் பரீட்சைகள் நீக்கப்பட்டன

# 'ஒப்படைகள்' இனி நடைமுறையில்!

## பேராசிரியர் அருட்பிரகாசம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தரத்தில் 2000, 2001ஆம் கல்வி ஆண்டுகளில் கற்கும் மாணவர்களுக்கு இதுவரை பாடசாலையில் நடத்தப்பட்டு வந்த தவணைக்கான ஐந்து மதிப்பீட்டுப் பரீட்சைகளும் இனிமேல் நடத்தப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக தவணைக்கு ஐந்து ஒப்படைகள் மட்டுமே நடத்தப்படும் எனப் பேராசிரியர் அருட்பிரகாசம் தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நேற்று நடந்த க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டம் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அதிபர்களும், சிரேஷ்ட ஆசிரியர்களும், மாணவர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்து கருத்துரை வழங்கிய பேராசிரியர் அருட்பிரகாசம் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர் பதிவேடுகளில் தவணைப் பரீட்சைப் புள்ளிகள் பதியப்பட வேண்டுமெனவும், விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு செய்முறை மதிப்பீடுகள் கட்டாயம் நடத்தப்பட வேண்டுமெனவும் கூறினார்.

இதேவேளை 2000, 2001ம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் குழுவாகவும் தனியாகவும் செயற்திட்டம் தயாரிப்பது அவசியம் எனவும், இதில் எதுவித மாற்றமும் இல்லை எனவும்,

எண்பது வீதத்திற்கு மேற்பட்ட வரவை உடையவர்களே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியுமெனவும் அவர் மேலும் கூறினார்.

இக் கருத்தரங்கின் மூலம் உயர்தரக் கற்றல் செயற்பாடு தொடர்பான பல்வேறு முரண்பாடு தெளிவுபடுத்தப்பட்டதாக கருத்தரங்கில் கலந்து கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ந)

### நோர்வே---

வுள்ளார். இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வில் இதுவரை காலமும் நிகழ்ந்திராத வகையில் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகின்றது.

லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பேச்சு வார்த்தைகள் முடிந்த பின் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்துவார் என எதிர்பார்த்தபோதும் நோர்வே தூதரகம் இச் சந்திப்பை இறுதி நேரத்தில் இரத்துச் செய்ததாக அறிவித்துள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் பேச்சு வார்த்தைகளை முடித்துக் கொண்டு இன்று மாலையே நாடு திரும்புவார் என அறிவிக்கப்பட்டுள்ளது, (வ)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
பிரசாந், ரியாசென்
நடித்த
**குட்லக்**
(புதிய வெளியீடு)
10.30, 2.30 (ப.நே)
வெட்டுப்படாத
முழுமையான நேரடி
CD யில் காண்பிக்கப்படும்
மகளிருக்கு இடமுண்டு
(00115)


### யாழ்.கடல்நீரேரியில்...

எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவைப் பணித்தார்.

இவ் பணிப்பின்பேரில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் மீன்பிடித்தடையை நீக்கி அதிகாலை ஐந்து மணிமுதல் முற்பகல் பத்து மணிவரை மீன்பிடிக்க அனுமதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் தடைக்கு முன்பு நடைமுறையிலிருந்த மீன்பிடித் தூரமே தற்போதும் நடைமுறையிலிருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் கூட்டப்பட்ட இம்மாநாட்டில் ஜனாதிபதியைச் சந்தித்த ஈ.பி.டி.பி. அமைப்பின் குழுவுடன், இராணுவத் தளபதி ஸ்ரீலால் வீரசூரிய, கடற்படைத் தளபதி திசேரா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மீன்பிடித் தடையினால் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் குறித்து ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன் தனது முதலாவது பாராளுமன்ற உரையில் எடுத்துக் கூறியிருந்தமையும் தடைக்கு எதிராகக் கடற்றொழில் சங்கங்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை கடந்த வாரம் நடத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது [ந]


STP COMPUTER WORLD
Reg. No: NAL/SD/377
**சிறுவர் கணனி வகுப்புக்கள்**
10-16 வயதினருக்கான பிரத்தியேக பாடத்திட்டம்
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:
காலை 10.00 மணி 19-02-2000 சனிக்கிழமை
மு. கு: மாணவர்களின் ஆற்றலுக்கேற்ற வகையில் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
இயக்குநர்
No. 54A, Palaly Road, Kantharmadam, Jaffna. (கி/78)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஆசிரியரைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக்கடமையாற்றும் மீசாலை மேற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் ஈழநேசன் என்பவரை நேற்று முன்தினத்திலிருந்து காணவில்லையென அவரது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறையீடுசெய்துள்ளனர். [ந]

## ஜெகன் எம். பி. யாழ்ப்பாணத்தில்

யாழ். மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினராக அண்மையில் நியமிக்கப்பட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வி.கே.ஜெகன் நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவாரெனத் தெரிய வருகின்றது. [ந]

### புதிய...

தமிழ் அரசியல் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது- (ந)

### புலிகளின்....

இடம் பெற்ற தாக்குதலிலேயே மேற்படி பொலிஸார் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

கொல்லப்பட்ட பொலிஸாரில் இருவர் பெண்கள் எனவும்தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலநறுவை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதுடன் அப் பிரதேசம் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தாக்குதலையடுத்து இவ் வாகனத் தொடரணி இரவு 7.30 மணியளவிலேயே மட்டக்களப்பை அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து பொலநறுவைக்கு தினமும் 15 முதல் 20 வரையான இராணுவ வாகனங்கள் தொடரணியாகச் செல்வது வழமையான சம்பவம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### குடத்தனை ..

கைது செய்யப்பட்டதற்கான ரசீது வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கைது செய்யப்பட்டவரின் தாயாரான செபஸ்ரியாம்பிள்ளை மேரி றூசலின் வடமராட்சி ஈ, பி, டி, பி. அமைப்பாளர் ஐ. சிறிரங்கேஸ்வரனிடம் புகார் செய்துள்ளார். 52

## வவுனியா கொழும்பு லொறிச்சேவை தாமதமின்றிச் செல்ல அனுமதி

[வவுனியா]

வவுனியாவிலிருந்து கொழும்புக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றிச் செல்லும் லொறிகளை தாமதமின்றி அனுப்புவதற்கு வவுனியா மாவட்ட இணைப்பதிகாரி திஸ்ஸ ஜெயரத்தினா உறுதி மொழியளித்துள்ளார்.

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் அப்துல்லா இது தொடர்பாக தகவல்தருகையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு செல்லும் சகல பொருட்களும் பாதுகாப்பு பரிசோதனையின் பின்பே அனுமதிக்கப்படுமென அறிவித்துள்ளார்.

வாகனங்களை சோதனையிடும் சோதனைச்சாவடி முன்னர் மதவாச்சியில் இருந்தது என்றும் அண்மையிலேயே ஈரப்பெரிய குளத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக வவுனியா வர்த்தகசங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [வ-103]

## திருமணமாகாத அச்சுவேலி இளைஞன் லண்டனில் விபத்தில் பலியானார்!

அச்சுவேலி இளைஞர் ஒருவர் லண்டனில் விபத்துக்குள்ளாகி பரிதாபகரமாக பலியாகியுள்ளார்.

அச்சுவேலி வரணனைச் சேர்ந்த சண்முகராசா சற்குணராசா (வயது29) என்பவரே பலியானவராவார்.

திருமணமாகாத இவர் 10வருடங்களுக்கு முன் வெளிநாடு சென்றிருந்தார் என்றும் இவரின் மரணம் குறித்து இவரின் உறவினர்களுக்கு லண்டனிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-52)

## கொட்டடிப் பகுதியில் சுகாதாரமின்றி இயங்கும் தேனீர்க்கடைகள் அகற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

கொட்டடி மீன் சந்தைக்கு முன்பாக உள்ள தேனீர்க்கடைகள் எமது அங்கீகார மற்றும் சுகாதாரமற்ற முறையிலும் நடத்தப்படுவதால் அக்கடைகளின் வியாபார நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் கேட்டுள்ளார்.

இவ்வாறு மாநகர சபையின் அனுமதியற்றும் சுகாதாரமின்றியும் நடாத்தப்படும் எந்தவொரு வியாபார நிலையத்திற்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

## கட்சியிலிருந்து நீக்கியதற்கு எதிரான தடை உத்தரவு நீடிப்பு

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள்முதல்வர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏக்கரெட்ணா மார்ச் 20 ஆம் திகதி வரை நீடித்துள்ளார்.

அன்றைய தினம் மீண்டும் இவ் விசாரணை தொடரும் என நீதவான் தெரிவித்தார்.

தடை உத்தரவிற்கு எதிராக ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணிச் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். (க-6)

### இணக்கம்...

வார்த்தை பி.ப. 4.00 மணி வரை நடைபெற்றது. இப் பேச்சு வார்த்தையின் போது பிராந்திய சபைகளின் ஆளுநர் நியமனம் கல்வி அதிகாரம் சம்பந்தமான விடயம் இருசாராராலும் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டு ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு முடியாமல் அவர்களுக்கிடையில் இணக்கம் ஏற்படவில்லை.

முதலமைச்சரின் சிபார்சின் பேரில் பிராந்திய ஆளுநர் நியமனம் தொடர்பாக கூட்டணியினரின் கருத்திற்கும் ஜனாதிபதியின் கருத்திற்குமிடையில் மாறுபாடு நிலவியதால் இவ்விடயத்திலும் இணக்கம் ஏற்படவில்லை.

காடுகளின் அதிகாரம் தொடர்பாக பிரசித்திபெற்ற தேசிய காடுகளைத் தவிர்ந்த ஏனைய சிறு காடுகள் அதிகாரம் தொடர்பான இறுதி முடிவு இன்று ஜி. எல். பீரிஸ் தலைமையில் 5மணிக்கு கூடி முடிவு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது-

கல்வியைப் பொறுத்த மட்டில் பிராந்திய பல்கலைக் கழகங்கள் நிறுவுவதில் இணக்கம் காணப்பட்ட போதும் தேசியப் பல்கலைக் கழகங்கள் கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றின் செயற்பாடுகள் அதிகாரங்கள் சம்பந்தமாக இருதரப்பாருக்குமிடையே நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

அரசுக்கும் தமிழ் கட்சிப் பிரதிநிதிகளுக்குமிடையேயான அடுத்த கட்டப்பேச்சுவார்த்தை எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாக உறுப்பினர்களை இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஈ. பி. டி. பியின் யாழ் தலைமையலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வி. கே. ஜெகன் கேட்டுள்ளார். (ந)

## கரவெட்டி இளைஞன் விடுதலை

கரவெட்டி பகுதியில்கடந்த 11ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞன் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இராஜகிராமத்தைச் சேர்ந்த க. கமலரூபன் (வயது 18) என்ற இளைஞனே விடுதலை செய்யப்பட்டவர் ஆவார்.

### செம்மணி. . -

யாழ்.பொலிஸ் நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்படும் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே இவ் எச்சங்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)